IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL

# இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

(காப்பீட்டுத் துறைக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு)

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

# காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கான பொது அறிவித்தல்

## நீங்கள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நபரா?

பணமோசடி தடுப்பு சட்டங்களின் கீழ், காப்புறுதி நிறுவனங்கள், காப்புறுதி தரகர்கள் மற்றும் காப்புறுதி முகவர்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் யார் என்பதை அடையாளம் காண வேண்டிய சட்டப்பூர்வ கடமையைக் கொண்டுள்ளனர்.

## அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் என்றால் யார்?

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள் என்பது, நாட்டிற்குள்ளோ அல்லது வெளிநாட்டிலோ அல்லது சர்வதேச அமைப்பொன்றிலோ முக்கியமான பொதுப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நபரை குறிக்கும் இதில் பின்வருவோர் அடங்குவர்:

- அரச அல்லது அரசாங்கமொன்றின் தலைவர்
- அரசியல்வாதி
- மூத்த அரச அதிகாரி
- நீதித்துதற அதிகாரி
- இராணுவ அதிகாரி
- அரசு அல்லது அரசுடைமை நிறுவனங்கள் / தன்னாட்சி அமைப்புகளின் மூத்த நிர்வாக அதிகாரிகள் (நடுத்தர அல்லது இளநிலை அதிகாரிகள் இதில் அடங்கமாட்டார்கள்)
- மேற்கூறிய நபர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய தொடர்புடையவர்கள்

## நீங்கள் என்ன பெய்ய வேண்டும்?

மேற்கூறிய பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் நீங்கள் அடங்கினால், காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போதும் அல்லது காப்புறுதி பரிவர்த்தனை மேற்கொள்ளும் போதும், அதனை காப்புறுதி நிறுவனம், தரகர் அல்லது முகவருக்கு தெரியப்படுத்துங்கள்.

## ஏன் இந்தத் தகவல் கேட்கப்படுகிறது?

இந்தத் தகவல், காப்புறுதி நிறுவனங்கள் சட்டப்பூர்வ தேவைகளைப் பின்பற்றவும், காப்புறுதி தயாரிப்புகள் பணமோசடி, பயங்கரவாத நிதியளிப்பு அல்லது பேரழிவு ஆயுதப் பரவலுக்கான நிதியளிப்பு போன்ற சட்டவிரோத செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் உதவுகிறது.

நீங்கள் வழங்கும் தகவல்கள், வாடிக்கையாளர் அடையாளச் சரிபார்ப்பு நடைமுறைகளின் ஒரு பகுதியாக அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு புதுப்பிக்கப்படலாம்.

## பொருந்தும் சட்டங்கள்

- 2006 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க நிதி பரிவர்த்தனை அறிக்கையிடல் சட்டம்
- 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காப்புறுதி நிறுவனம் (காப்புறுதியாளர் உரிய கவனிப்பு) விதிமுதறகள்

காப்புறுதியாளர்களிடம் காப்புறுதியாளர் உரிய கவனிப்பு / உங்கள் வாடிக்கையாளரை அறிந்துக் கொள்ளுங்கள் நடைமுறைகளை மேற்கொள்வது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறையாகும். எனவே, அனைத்து காப்புறுதியாளர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம், உலக வர்த்தக மையம்,
கொழும்பு 01.

தொலைபேசி: 011 2396184 - 9 | தொலைநகல்: 011 2396190
மின்னஞ்சல்: info@ircsl.gov.lk | இணையத்தளம்: www.ircsl.gov.lk

SELACINE

IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL IRCSL